1970 மார்ச் 23]

திருப்பூர் ஜம்மனே பாலம்

* 502 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்பூர் நகரில் உள்ள ஜம்மனே பாலம் வெடிப்பு விட்டு விட்டது என்பது உண்மையா ?

(இ) இப்பாலத்தை புதுப்பிக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், எப்போது வேலே துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) & (உ): வினுவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் திருப்பூர் நகராட்சியின் எல்லேகளுக்குள் அமைந்துள்ள திருப்பூர்–சோமனூர் சாலேயில் மைல் 0/0-வில் இருந்து 1 மைல் 4 பர்லாங்கு தொலேவில் ஜம்மனே ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. பாலத்தை அகலப் படுத்துவதற்கும், மேல் தளத்தைப் புதுப்பிக்கவும் ரூபாய் 3 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே இந்தப் பணியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம், திருப்பூர் நகராட்சியின் எல்லேக்குள் இருப்பதால் செலவில் 25 சதவீதத்தையும் சென்டேஜ் கட்டணத்தையும் நகராட்சி கொடுக்க வேண்டும். இத் தொகையை ஏற்றுக்கொள்ளும் நகராட்சி மன்றத்தின் முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது. நடப்பு ஆண்டிலேயே இந்த வேலேயை மேற்கொள்வதற்கான அரசின் ஒப்பளிப்புடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலேவரவர்களே, நம்முடைய அரசாங்கம் வந்தபிறகு, திருப்பூரில் 6 இலட்சம் ரூபாயில் ஏற்கெனவே ஒரு பாலத்தைப் புதுப்பித்து அண்மையில் திறப்பு விழா நடத்தியிருக்கிருர்கள். மேற்கொண்டும் 3 இலட்சம் ரூபாய் தந்தமைக்காக இந்த அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவித்து, இந்த வேலே எப்போது முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கவில்லே என்பது என்னுடைய கருத்து.

கூவம் சீரமைப்புத் திட்டம்

* 503 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கூவம் நதி சீரமைப்புத் திட்டத்திற்கு டிசம்பர் 1969 முடிய செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய ரூபாய் 17.65 லட்சம் கூவம் சீரமைப்பு திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.